பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 02 2025 Friday 7.15 Pm

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பெண்கள் அனைத்துத்துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

- தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- எரிசக்தி ஒத்துழைப்பு மேம்பாட்டில் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

- பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் இன்று நேரிட்ட குண்டுவெடிப்பில் 11 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

- தேசிய விளையாட்டுப்போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைந்தன.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<>>>>>>

பெண்கள் அனைத்துத்துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

கர்நாடகா தலைநகர் பெங்களூருவில் சர்வதேச மகளிர் மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், கலை, கலாச்சாரம், அரசியல் உட்பட அனைத்து துறைகளிலும் மகளிரின் முன்னேற்றம் விரைவாக உள்ளதாகவும், மகளிரின் சக்தி தொடர்ந்து மேம்பட்டு வருவதாகவும் கூறினார்.

மகளிரின் பங்களிப்பை பொறுத்தவரை பாராட்டத்தக்க வகையில் அமைந்திருப்பதாகவும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

வறுமை மற்றும் சமத்துவமின்மையை போக்குவதற்கான சக்தியாக கல்வி திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குழந்தைகளுக்கு கல்வியை விட மனித நேயத்திற்கான மிகப்பெரிய முதலீடு எதுவும் இருக்க முடியாது என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

கடந்த 2019-ஆம் ஆண்டு புல்வாமா தாக்குதலில் உயிர் தியாகம் செய்த ராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், சமூக வலைதளத்தில் அவர் இதனை பதிவிட்டுள்ளார்.

ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் மிகப்பெரிய எதிரியாக தீவிரவாதம் உருவெடுத்துள்ளது என்றும், அதனை உலக நாடுகள் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும் என்றும் திரு அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸை, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று திரு அமித் ஷா தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், திரு தேவேந்திர பட்நவிஸ் உள்ளிட்ட உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

அப்போது, மகாராஷ்ட்ராவில் இந்த சட்டங்களை அமல்படுத்துவது தொடர்பான தற்போதைய நிலை குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

புதிய குற்றவியல் சட்டங்களை பின்பற்றி, விசாரணை இயக்குனரகத்தை மகாராஷ்ட்ரா அரசு ஏற்படுத்த வேண்டும் என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

நாட்டின் சட்ட நடைமுறைகள் மேலும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் கடந்த ஆண்டு ஜுலை முதல் தேதியிலிருந்து புதிய குற்றவியல் சட்டங்கள் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

இயற்கை எரிவாயு உள்ளிட்ட எரிசக்தி ஒத்துழைப்பில் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையேயான நல்லுறவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா எரிசக்தி வாரம் தொடர்பான கருத்தரங்கில் இன்று நிறைவுரையாற்றிய அவர், இயற்கை எரிவாயு நுகர்வு இலக்கை ஆறு சதவீதத்தில் இருந்து, 15 சதவீதமாக அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

திரவ எரிவாயு விநியோகத்திற்காக அமெரிக்கா உடனான நல்லுறவு முக்கியத்துவம் பெற்றிருப்பதாகவும் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இந்திய பெருங்கடல் மாநாட்டிற்கு இடையே பங்களாதேஷ் வெளியுறவு விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு Md Touhid Hossain-ஐ வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் சந்தித்து பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவும், ஓமனும் இணைந்து நடத்தவுள்ள இந்த மாநாடு வரும் 16 மற்றும் 17-ஆம் தேதிகளில் மஸ்கட்டில் நடைபெறுகிறது.

இம்மாநாட்டில் பங்கேற்க வருமாறு பங்களாதேஷ் வெளியுறவு விவகார ஆலோசகருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், திரு ஜெய்சங்கர், திரு Md Touhid Hossain-சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரல் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - Song – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் இதுவரை 50 கோடிக்கும் மேற்பட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

கடந்த மாதம் 13-ஆம் தேதி தொடங்கிய கும்பமேளா, வரும் 26-ஆம்தேதிவரை நடைபெறவுள்ளது.

தினமும், லட்சக்கணக்கானோர் புனித நீராடிவரும் நிலையில் இன்று ஒரே நாளில் 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே, பக்தர்களுக்கு தடையற்ற வங்கி சேவைகளை இந்திய அஞ்சல் வங்கி வழங்கி வருகிறது.

இதில், டிஜிட்டல் வங்கி சேவைகள் முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஐந்து முக்கிய இடங்களில் அஞ்சல் வங்கி சேவை கவுண்டர்கள், மொபைல் வங்கி அலகுகள் மற்றும் வாடிக்கையாளர் உதவி மையங்கள் அமைக்கப்பட்டு உதவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துத்தரப்பினருக்குமான அஞ்சல் வங்கி சேவையை உறுதி செய்வதில் தாங்கள் மகிழ்ச்சி அடைவதாக அதன் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு விஸ்வேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - Song – 8 நொடிகள்)*

<<<<<<>>>>>>

தகவல் ஒலிபரப்பு அமைச்சகமும், இந்திய இணையம் மற்றும் மொபைல் சங்கமும் இணைந்து நாட்டின் கலாச்சார பாரம்பரியம் குறித்த “Waves சவால்” என்ற பெயரில் புகைப்படங்களை அனுப்புவதற்கான போட்டியை அறிவித்துள்ளது.

“இதுதான் என் இந்தியா” என்ற கருப்பொருளை மையமாக கொண்டு, படைப்பாளிகளும், கதை சொல்லிகளும் இந்தியாவை பற்றிய தங்களின் தொலைநோக்கு பார்வையை சமூக வலைதளங்கள் மூலம் வெளிப்படுத்தும் வகையில் இந்த போட்டி நடத்தப்படுகிறது.

வரும் மே ஒன்றாம் தேதிமுதல், நான்காம் தேதிவரை மும்பையில் உள்ள ஜியோ நிறுவன மையங்களில் படைப்பாளர்கள் பங்கேற்கும் வகையில் இப்போட்டி நடைபெறும் என மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

புதுச்சேரியில், 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு ஐந்து லட்சம் ரூபாய் வரை சுகாதார காப்பீடு வழங்கும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் இன்று தொடங்கிவைத்தார்.

முதலமைச்சர் திரு என் ரங்கசாமி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தகுதிவாய்ந்த மூத்த குடிமக்களுக்கு காப்பீட்டு அட்டைகளையும் துணை நிலை ஆளுநர் வழங்கினார்.

<<<<<<>>>>>>

நவீன சிகிச்சை முறைகளும், ஹோமியோபதி போன்ற மாற்று மருத்துவ முறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவது இன்றைய மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு அவசியம் என்று தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் சர்வதேச ஹோமியோபதி மாநாட்டில் பங்கேற்று பேசிய அவர், ஹோமியோபதி சிகிச்சையை பொறுத்தவரை இயற்கை சிகிச்சை முறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்தார்.

இதுபோன்ற மாநாடு எதிர்கால ஹோமியோபதி துறையில் பல புதிய முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கும் என்றும், அதன் வளர்ச்சிக்காக அனைவரும் சேர்ந்து உழைக்க முன்வர வேண்டும் என்றும் திரு மா.சுப்பிரமணியன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

தில்லி முன்னாள் அமைச்சர் திரு சத்யேந்திர ஜெயினுக்கு எதிராக வழக்கு தொடர ஒப்புதல் அளிக்குமாறு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை, உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

நிதி முறைகேடு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின்கீழ், திரு சத்யேந்திர ஜெயினுக்கு எதிராக அமலாக்கத்துறையிடம் போதிய ஆதாரங்கள் இருப்பதாகவும், அதன் அடிப்படையில் அனுமதி வழங்குமாறும் உள்துறை அமைச்சகம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் இன்று நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 11 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர்.

ஹனாய் பகுதியில் சாலையோரம் குண்டு வைக்கப்பட்டிருந்ததாகவும், அந்த வழியாக தொழிலாளர்களை ஏற்றிசென்ற லாரி சென்றபோது குண்டு வெடித்ததில் அவர்கள் உயிரிழந்ததாகவும் பாதுகாப்புப்படையினர் தெரிவித்தனர்.

குண்டுவெடிப்பை தொடர்ந்து அந்த பகுதியை சுற்றி வளைத்து பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டதாகவும், காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்திற்கு எந்தவொரு அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

<<<<<<>>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், பொதுத்தேர்வு தொடர்பாக மாணவர்களின் அச்சத்தை களையும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாடிய நிகழ்ச்சியில் பங்கேற்ற Domnic Geoffray-வுடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தேசிய விளையாட்டுப்போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைந்தன.

உத்தராகண்டின் Haldwani –ல் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு மன்சுக் மாண்டவியா பங்கேற்று விளையாட்டு வீரர்களை கௌரவித்தனர்.

நிகழ்ச்சியில் பேசிய திரு அமித் ஷா, இந்த போட்டியில் பசுமை விளையாட்டு முன் முயற்சிகளை மேற்கொண்டதற்காக பாராட்டு தெரிவித்தார்.

39-ஆவது தேசிய விளையாட்டுப்போட்டிகளை நடத்த உள்ள மேகாலயா மாநில முதலமைச்சர் திரு Conrad Sangma-விடம் போட்டிகளுக்கான கொடியை உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வழங்கினார்.

இப்போட்டியில், 68 தங்கம், 26 வெள்ளி, 27 வெண்கலப்பதக்கங்களுடன் சர்வீஸஸ் அணி முதலிடத்தை பிடித்தது.

மகாராஷ்ட்ரா 54 தங்கம், 71 வெள்ளி, 76 வெண்கலப்பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தையும், 48 தங்கம் உட்பட 153 பதக்கங்களுடன் ஹரியானா மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

27 தங்கம் உட்பட 92 பதக்கங்களுடன் தமிழகம் ஆறாவது இடத்தை பிடித்தது.

<<<<<<END>>>>>>